# சீதாவகபுர நகர சபை
# கொழும்பு மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 மார்ச் 28 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 மார்ச் 24 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஜனவரி 29 ஆந் திகதியன்று நகர சபைத் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, சீதாவகபுர நகர சபை 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சீதாவகபுர நகர சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) கணக்கில் கைவிடப்படல்**

மீளாய்வாண்டின்போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 52,500 பெறுமதியான நிலையான சொத்துக்கள் மற்றும் கழிவுப் பொருள் முகாமைத்துவ உதவி

நிலையம் வழங்கிய சமிக்ஞையுடன் கூடிய நாத ஒலி உபகரணத் தொகுதி ஆறினது பெறுமதியும் மூலதனமாக்கப்படவில்லை.

**(ஆ) வகைப்படுத்தல் வழுக்கள்**

மீளாய்வாண்டு முடிவிலிருந்த ரூபா 6,525,926 பெறுமதியான கையிருப்பை பொதுக் களஞ்சியம், மின்சாரக் களஞ்சியம், ஆயுர்வேதக் கையிருப்பு என வெவ்வேறாகக் காட்டவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றின்மை

முற்கொடுப்பனவு மீதியாகிய ரூபா 1,110,351 மற்றும் பொதுக்களஞ்சிய மீதியாகிய ரூபா 6,525,926 என்பன தயாரான விதத்தைக் காட்டும் பட்டோலை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் அம்மீதிகளைத் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2011 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் வருவாயிலும் கூடிய மீண்டுவருஞ் செலவினம் ரூபா 16,750,454 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் வருவாயிலும் கூடிய மீண்டுவருஞ் செலவினம் ரூபா 16,428,291 ஆகும்.

### 2.2 வருவாய் நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | செலவின விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா"000 | ரூபா"000 | ரூபா"000 |
| (i) | தீர்வையும் வரியும் | 12,922 | 12,575 | 5,079 |
| (ii) | குத்தகை வாடகை | 25,773 | 18,376 | 14,556 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 933 | 645 | 108 |
| (iv) | பிற வருவாய் | 11,600 | 11,240 | 8,105 |

### 2.2.2 வர்த்தக/ சுற்றாடல் அனுமதிப் பத்திரக் கட்டணம்

(அ) வர்த்தக அனுமதிப்பத்திரம் வழங்கும்போது வருவாயைச் சேகரிப்பது மாத்திரமே நோக்காக அல்லாது பொதுமக்களின் நலனும் கருத்திற்கொள்ளப்படுமாறு பரிசீலனை செய்யப்பட்டு அனுமதிப்பத்திரம் வழங்குவது கவனத்திற் கொள்ளப்படவில்லை.

(ஆ) சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டிய வியாபாரங்கள் களப்பரிசோதனை மூலம் இனங்காணப்படாமையால், பொதுமக்களது நலனுக்குப் பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய வியாபாரங்களை நடாத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

### 2.3 ஒப்பந்த நிர்வாகம்

**நேரடி வேலைகளுக்குப் பொருட்கள் வழங்குதல்**

இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முற்கலவைக்குப் பயன்படுத்தப்படும் தார், சிப்ஸ் கற்கள், மணல் என்பவற்றினது பெறுவனவும் வழங்கலும் மற்றும் முற்கலவை உற்பத்திகளை வழங்கல் மற்றும் எஞ்சிய கையிருப்பு என்பன வெவ்வேறாகத் தோற்றுமாறு பதிவேடு ஒன்று பேணப்படவில்லை.

(ஆ) 2011 ஜனவரி 01 தொடக்கம் ஒக்டோபர் 19 வரை பின்வரும் வேலைகளை உள்ளடக்கிய பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட ரூபா 2,490,080 க்குரிய 39 வேலைகளை ஆரம்பிக்கையில் தேவைப்படும் முற்கலவை மற்றும் ஏனைய வகைக் கற்களது அளவு மதிப்பிடப்படவில்லை. பராமரிப்பு நடவடிக்கைகள் முடிவுற்ற பாதைகளில் வேலை ஆரம்பித்த மற்றும் முடிவு செய்த துாரத்தின் அளவு, பயன்படுத்திய முற்கலவையினது அளவு, பயன்படுத்திய ஏனைய வகைக் கற்களின் அளவை உள்ளடக்கி நடவடிக்கைகள் வெற்றிகரமாக நடைபெற்றதைக் குறிக்கும் தொழில்நுட்ப உதவியாளரின் அறிக்கை என்பன இருக்கவில்லை.

## 2.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அரசாங்க பொருட்கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.4 பிரிவின் பிரகாரம் பண்டங்களை அல்லது சேவைகளைக் கொள்வனவு செய்யும்போது மதிப்பிடப்பட்ட செலவில் 20 சதவீதத்துக்கு மேற்பட்ட தொகை முற்பணமாக வழங்கப்படலாகாது. எனினும், 2 வாகனங்களைப் பழுது பார்ப்பதற்கு மதிப்பிடப்பட்ட தொகையில் 52% மற்றும் 61% என முற்பணம் வழங்கப்பட்டிருந்தது.

## 2.5 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு கொடுப்பனவு செய்ய வேண்டிய மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 113,438,929 ஆகும். அம்மீதியில் 5 ஆண்டுகளுக்கு மேலாக முன்கொண்டுவரப்பட்டவாறிருந்த ரூபா 10,267,133 மீதியும் உள்ளடங்கியிருந்தது.

(ஆ) வரவு, செலவுத் திட்டமிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமான, செலவினங்களுக்கிடையே குறிப்பிடத்தக்க சாதகமற்ற வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையால் வரவு, செலவுத் திட்டம் பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 2.6 செயற்திறன்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நடமாடும் 12 ஆயுர்வேத சிகிச்சை முகாம்களை ஆண்டின்போது நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டபோதும், 2011 ஆம் ஆண்டின்போது ஒரு சிகிச்சை முகாம் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஆயுர்வேதம் குறித்து அறிவு புகட்டல், பாடசாலைக் கல்வி நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துதல், மூலிகைத் தோட்ட நவீகரண நடவடிக்கைகள், தாவர இலைப்பானம் மற்றும் மூலிகைப் பான விற்பனை என்பவற்றிற்கு விற்பனைக் கூடங்களை நிர்மாணித்தல் போன்ற பணிகளை நிறைவேற்றத் திட்டமிட்ட போதும் மீளாய்வாண்டின்போது அப்பணிகள் நடைபெறவில்லை.

## 2.7 சொத்து முகாமைத்துவம்

### (அ) அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன்

2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 5,301,455 ஆகும். அம் மீதியில் நிலுவையாக உள்ள ரூபா 165,001 கடன் மீதியும் உள்ளடங்கியிருந்தது.

### (ஆ) பெற வேண்டிய கணக்குகள்

2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 35,033,172 ஆகும். அம் மீதியில் 5 முதல் 12 ஆண்டு வரை நெடுங்காலமாக முன்கொண்டுவரப்பட்டவாறிருந்த ரூபா 15,367,883 மீதியும் இருந்தது. அவற்கை அறவிடுவதற்கு/ தீர்த்துவைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருவாய் நிர்வாகம்

(இ) கையிருப்புக் கட்டுப்பாடு